2004 ஜூலை 31]

ஆகவே அவர்களுடைய கல்வித் தரத்தை உயர்த்துவதற்காக—தங்கிப் படிப்பதற்கு மாணவர் விடுதி இல்லாமல், மாணவர்கள் தவித்துக் கொண்டிருக்கிறார்கள். எனவே—ஆதி திராவிடர் நலத் துறையின் மூலமாக அடுத்த ஆண்டிலாவது அரசு மாணவர் விடுதி கட்டித் தர முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் மேலான பார்வைக்குக் கொண்டு செல்வோம்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *110*, திரு. இரா. இராம் பிரபு, மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்.

110—

மாணவர் விடுதி

***36518—திரு. இரா. இராம் பிரபு:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பரமக்குடி நகரில் ஆதி திராவிடர் மாணவர் விடுதி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. சொ. கருப்பசாமி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) பரமக்குடியில் ஏற்கெனவே மாணவர் விடுதி ஒன்றும், மாணவியர் விடுதி ஒன்றும் அரசுக் கட்டடங்களில் இயங்கி வருவதால், புதியதாக மாணவர் விடுதி அமைக்கத் தேவை ஏற்படவில்லை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: வினா எண் *111*, திரு. தி. வேல் முருகன், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS